**<u>சுருக்கம்</u>**

சுற்றுலா – மாநில அரசு திட்டப்பணி – மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் 2014–15 – புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில் பகுதியில் ரூ.10.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல் – நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**<u>சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (சு3) துறை</u>**

**அரசாணை (நிலை) எண்.58** நாள் 17.02.2015

திருவள்ளுவர் ஆண்டு 2046, ஜய மாசி 5

படிக்கப்பட்டது:–

1. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவரின் கடிதம் எண். ந.க.வி3/6662/2014 (வளர்ச்சி), நாள் 17.11.2014 (சுற்றுலா ஆணையருக்கு முகவரியிட்டது)
2. சுற்றுலா ஆணையரின் கடித எண்.7730/திமவ2/2014, நாள் 20.11.2014.

•••••

**<u>ஆணை</u>**

2014–15 ஆம் ஆண்டுக்கான சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் “புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்படும்” என்ற அறிவிப்பினை செயல்படுத்துவதற்கிணங்க, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் ரூ.10.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், சுகாதார வசதிகள் ஏற்படுத்துவது தொடர்பாக பின்வரும் பணிகளை நிறைவேற்றக்கோரும் கருத்துருவை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெற்று சுற்றுலா ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்திருந்தார்.

| வ. எண். | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | விராலிமலை ஸ்ரீ மெய்க்கண்ணுடையாள் ஆலயத்தின் மேற்குப்பகுதியில் கழிவறை மற்றும் குளியலறை கட்டுதல் | 2.50 |
| 2. | விராலிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலின் உட்பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி அமைத்தல் | 2.50 |
| 3. | விராலிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலின் அடிவாரத்தில் (பேருந்து நிழற்குடை அருகில்) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி அமைத்தல். | 2.50 |

| | | |
|---|---|---|
| 4. | விராலிமலை ஸ்ரீமெய்க்கண்ணுடையாள் ஆலயத்தின் உட்பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி அமைத்தல். | 2.50 |
| | கூடுதல் | 10.00 |
| (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) | | |

2. மேற்கண்ட பணியை 2014–2015 ஆம் நிதியாண்டிற்கு, சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ஒதுக்கப்பட்ட நிதி ரூ.5.00 கோடியிலிருந்து மேற்கொள்ள அரசாணை வெளியிடுமாறு சுற்றுலா ஆணையர் கேட்டுள்ளார்.

3. சுற்றுலா ஆணையரின் மேற்கண்ட கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்து, அரசு அதனை ஏற்று பின்வருமாறு ஆணையிடுகிறது:–

அ) மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களின் 2014–15ஆம் ஆண்டிற்கான அறிவிப்பினை நிறைவேற்றும் விதமாக, புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) திட்ட மதிப்பீட்டில் மேலே பத்தி 1–ல் குறிப்பிட்டுள்ள சுகாதார வசதிப் பணிகளை மேற்கொள்ள சுற்றுலா ஆணையருக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

ஆ) மேற்காண் தொகை ரூ.10.00 இலட்சத்தை (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) காசோலை அல்லது நிதியிருப்பு சான்றிதழ் முறையில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியருக்கு வழங்க ஏதுவாக, சுற்றுலா ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

இ) ஒப்பளிக்கப்பட்ட பணிகளை செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பினை புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) மூலம் மேற்கொள்ள சுற்றுலா ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

4 . மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத்தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

''5452 – சுற்றுலா குறித்த மூலதனச் செலவு – 01 – சுற்றுலா அடிப்படை வசதிகள் – 101 – சுற்றுலாத் தலங்கள் – பன்னிரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II – மாநிலத் திட்டம் – KV – சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் – 16 பெரும் பணிகள்''

(DPC No.5452-01-101-KV-1604)

5. 2014–15ஆம் நிதியாண்டு முடிவதற்குள் இத்திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட வேண்டும். மீதத்தொகை இருப்பின் அரசுக்கு சரண் செய்யப்பட வேண்டும் எனவும் இத்திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது சுற்றுலாத் துறை அலுவலர்கள் பார்வையிட்டு கண்காணிக்க வேண்டும் எனவும், திட்டப்பணிகள் முடிவுற்றபின், இனம் வாரியாக பயனீட்டுச் சான்றிதழ் பெறப்பட்டு அரசுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் எனவும் சுற்றுலா ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை, அத்துறையின் அ.சா.எண்.1648/கல்வி.II/2015, நாள் 30.01.2015 வாயிலாகப் பெற்று வெளியிடப்படுகின்றது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ரா.கண்ணன்**

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்

சுற்றுலா ஆணையர், சென்னை–2.

ஆணையர், ஊரக வளர்ச்சித்துறை, சென்னை –15.
மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை மாவட்டம்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 9.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 9.
(சுற்றுலா ஆணையர் வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 9/18.

நகல்:–
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
புதுக்கோட்டை மாவட்டம்.
சுற்றுலா அலுவலர், காரைக்குடி (செட்டிநாடு).
நிதி (கல்வி 2)த் துறை, சென்னை – 9.
ஊரக வளரச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை – 9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (சு1/சு2/பொது) துறை, சென்னை – 9..
தேசிய தகவலியல் மையம், சென்னை –9.
(அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்காக)
உதிரி/இருப்பு கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்